19 JAN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 05 புதன்கிழமை (19 - 01 - 2000) VALAMPURI ஒலி: 31


## புத்தாயிரமாம் ஆண்டில் 18நாட்களில் 14பேரைக் காணவில்லை

(வவுனியா)

வவுனியாவில் புத்தாயிரமாம் ஆண்டிலிருந்து பதினெட்டு நாட்களுள் 14பேர்காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது,

இத்தகவலை வவுனியா மனித உரிமைகள்ஆணைக் குழுவின் இணைப்பு அதிகாரி திரு.எஸ்.சிறிதரன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள 14 பேர்களில் 13 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், ஒருவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 பேரில் 7பேர் பொலிஸ் நிலையத்திலும், 6 பேர் இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பிரதமரின் பாதுகாப்பு அதிகாரியை குறிவைத்துஜம்பட்டா வீதியில்குண்டு

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில்ஜம்பட்டா வீதியில் சக்தி வாய்ந்த குண்டொன்று நேற்றுக் காலை 8.30மணிக்கு கண்டுபிடிக்கப்பட்டு அக் குண்டு 10.30 மணிக்கு செயலிழக்கச் செய்யப்பட்டது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பாதுகாப்புப் படைப்பிரிவுபணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந் ஜெயசிங்காவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு முன்னால் இக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

திரு.ஜெயசிங்காவின் வீட்டுக்கு முன்னால் சந்தேகத்துக்கு இடமான முறையில் குண்டு ஒன்று இருப்பதை ஜம்பட்டா உதவிப் பொலிஸ் அதிகாரி உப்புல் ரஞ்சித் அறிந்து தகவல் வழங்கியதை அடுத்து இக் குண்டு மீட்கப்பட்டது.

250 கிலோ கிராம் எடையுள்ள இக்குண்டை வெடிக்க வைப்பதற்குரிய சாதனங்களும், குண்டைச் சுற்றி சுமார் 50 இரும்பு உருண்டைகளும் இருக்கக் காணப்பட்டன.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஜெயந்த இக்னேஸியஸ், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மல்கரிகத்தே, கொட்டாஞ்சேனை பொலீஸ்

(6ம் பக்கம் பார்க்க)

# ★ களுத்துறையில் உள்ள தமிழ்க் கைதிகள்— கண்டி, அநுராதபுரம், பதுளை, காலி ஆகிய சிறைகளுக்கு மாற்றப்படுவர்!

## சிறைச்சாலை ஆணையாளர்தகவல்

(கொழும்பு)

**களுத்துறை சிறைச் சாலையில் உள்ள தமிழ்க்கைதிகள் வேறு பல சிறைகளுக்கு பெப்ரவரி மாதம்முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.**

**இம்மாதம் 6ம் திகதி இச்சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து தமிழ்க்கைதிகளை இடமாற்றம் செய்ய வேண்டுமெனப் பன்முகப் படுத்தப்பட்ட அழுத்தங்களை அரசுக்கு பல்வேறு அமைப்புக்களும் கொடுத்து வந்தன.**

இதனை அடுத்து களுத்துறைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப் பட்டுள்ள சுமார் 750 கைதிகளையும் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது.

கடந்த 6ம் திகதி இடம் பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து இரண்டு தமிழ்க் கைதிகள் கொல்லப் பட்டும் சுமார் 40 பேர் வரை காயப்பட்டுமிருந்தனர்.

களுத்துறை சிறையில் உள்ள 750 கைதிகளில் முதற்கட்டமாக 350 கைதிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப் படவுள்ளனர்.

இவர்கள் கண்டியில் உள்ள போகம்பரைச்சிறைச்சாலைக்கும், அனுராதபுரம் சிறைச் சாலைக்கும், பதுளையில்

(6 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சின் இணைச்செயலர் இலங்கைவிஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சின் தெற்காசிய இணைச் செயலாளர் குயின் லின்ட்ஜே நேற்று இலங்கை வந்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக குயின் லிண்ட்ஜே நேற்று தமிழ் அரசியல்கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்'

தமிழ் அரசியல் கட்சித்தலைவர்களின் சந்திப்பை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்காவையும் இவர் சந்திக்கவுள்ளார்,

இதேவேளை பிரித்தானியாவில் இலங்கைக்கான கொழும்பில் உள்ள உயர் ஸ்தானிகர் செல்வி லிண்டா டியு பீல்டு நேற்று வவுனியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஈ. பி. டி. பி.யின் புதிய எம். பிக்கள் இருவர் நேற்று சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ், மாவட்ட புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆலோசகர் சின்னத்துரை தவராசா ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேலும்மயிலும் குகேந்திரன் (ஜெகன்) ஆகியோர் நேற்று பாராளுமன்ற சபாநாயகர் கே. பி. இரத்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ட்றக் மோதி பெண்காயம்

[வவுனியா]

வவுனியா நெல்லுக்குளம் கலைமகள் வித்தியாலயத்திற்கு அருகில் புகையிரதப் பெட்டியில் இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் குடும்பப்பெண் ஒருவர் காயமுற்றார்,

அன்ரனி விசாலாச்சி வயது 50 என்பவரே விபத்தில் காயமுற்றவராகும். (வ)

### பிளவர்ஸ் வீதி குண்டு வெடிப்பு

## தற்கொலைக் குண்டுதாரி "யசோதா" இல்லையென குற்றப் புலனாய்வு தகவல்

[கொழும்பு]

கொழும்பு பிளவர்ஸ் வீதி குண்டுவெடிப்பு சம்பந்தமாக சந்தேகிக்கப்பட்ட தற்கொலைக் குண்டுதாரி யசோதா திலகரத்தினா இல்லை என்று கொழும்பு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளார்.

பிளவர்ஸ் வீதிக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி தற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குமார் கொலைதொடர்பாக பெண்கள் இருவர் தேடப்படுகின்றனர்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர்குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக விசாரணை செய்துவரும் கொழும்பு புலனாய்வுப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக பெண்கள் இருவரைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த இரு பெண்களில் ஒருவர் கொழும்பு மாநகர சபையில் தொழில் பார்க்கும் சிற்றூழியர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

(6ம் பக்கம் பார்க்க)

## அலவி தலைமையில் ஆர்ப்பாட்டம் யாழ். உயர் அதிகாரிகளை மாற்றவும்

(கொழும்பு)

மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக நேற்று நண்பகல் 12மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் ''லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில்10க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களும்,

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் யாழ்நகர் வருகை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து பத்திரிகையாளர் குழுவொன்று இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இன்று காலை விசேட விமானமொன்றில் வருகை தரவிருக்கும் இப்பத்திரிகையாளர் குழுவில் உள்நாட்டு வெளிநாட்டு செய்தி ஊடகங்களைச் சேர்ந்த சுமார் 60

(6ம் பக்கம் பார்க்க)

## ஒரேபாடசாலையில் நீண்ட காலம் படிப்பித்த ஆசிரியருக்கு இடமாற்றம்

ஊவா மாகாணத்தில்கடந்த 8வருடங்களாக தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமை யாற்றிவரும் அதிபர்களை வேறுபாடசாலைகளுக்கு இட மாற்றம் செய்வதற்கான நட வடிக்கைகளை ஊவா மா காண அமைச்சரவை எடுத் துள்ளது.

ஊவாமகாண தமிழ் கல்வி பணிப்பாளர் என். சச்சிதா னந்தனின் பணிப்புரைக்கமை யவேகல்வி அதிகாரிகள் இந்த இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## ஏடு தொடக்குதல்

கொட்டடி சனசமூக நிலைய பாலர் பாடசாலை யில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பாலர்களுக்கான ஏடு தொடக்கும் வைபவம் இடம் பெறவிருக்கின்றது.

சனசமூக நிலையத் தலைவர் பொ. ஸ்ரீ ராக புலேந்திரன் தலைமையில் இவ் வைபவம் இடம் பெறுகிறது. (க)


உ
சிவமயம்

## புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தைமாதம் 6ம்நாள் (20 - 01 - 2000)
வியாழக்கிழமை பகல் 1.26 முதல் 2.04 (பழைய நேரம்)
வரையுள்ள ரிஷபலக்கினமும் புனர்பூச நட்சத்திரமும்
சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த
நல்வேளையில்.



யாழ்ப்பாண வணிக நிலையத்தின் சக நிறுவனமான

## யாழ்ப்பாண இரும்பகம்
## JAFFNA HARDWARE



என்னும் ஸ்தாபனத்தினை திறந்து நடாத்த இறையருள்
கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப
சமேதரராய் வருகை தந்து வளம்பெற்று
வளர வாழ்த்தியருளும் வண்ணம்
வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை வேண்டி நிற்கும்
பரராஜசிங்கம் ஸ்ரீகரன் ஸ்ரீமுகுந்தன்

யாழ்ப்பாண இரும்பகம்
168, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண வணிக நிலையம்
304, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T. P: 2509, 2806

[000111]


## யாழ். பிரதேச செயலர் பிரிவில்
## 478 பேருக்கு 5 ஆயிரம் ரூபா முதல் கட்டமாக வழங்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வீடிழந்தோருக்காக வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகையாக முதற் கட்டமாக 478 பேருக்கு 5000 ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக யாழ் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களுள் முதல் கட்ட பணம் பெற்றவர்களுள் 136 பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 15,000 ரூபாவும் வழங்கப் பட்டுள்ளது.

இதே வேளை நாவாந்துறை, குருநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 101 பேருக்கு 1ஆம், 2ஆம் கட்டக் கொடுப்பனவாக தலா 10,000 ரூபா வீதமும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-29)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பாலர் விளையாட்டுக்கள், பாலர் கதைகள் நூல் வெளியீட்டுவிழா 20 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, மாநகர ஆணையாளர் வெ.பொ. பாலசிங்கம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் வெளியீட்டுரையையும் முதற் பிரதி, சிறப்புப் பிரதிகளை முறையே, யூனிசெப் திட்டமிடல் அதிகாரி ஜெனி புறூனி, வலம்புரி பிரதம ஆசிரியர் கோ.சி. வேலாயுதம் ஆகியோர் பெற்றுக் கொள்வார்.

தொடர்ந்து, பாலர் விளையாட்டுக்கள் நூல் மதிப்புரையை யாழ், பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பியும், பாலர் கதைகள் நூல் மதிப்புரையை மக்கள் வங்கி கன்னாதிட்டிக்கிளை முகாமையாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் நிகழ்த்துவர். (க-29)

## பொதுச் சந்தை திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்ட இணுவில் பொதுச் சந்தை இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசாவினால் திறந்துவைக்கப்படும். (க-18)

## புதிய நிர்வாகிகள்

உடுவில் கிழக்கு இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தின் நடப்பு ஆண்டிக்கான உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வை.ஆனந்த ஜெஸ்கரன், உப தலைவர் சு.காந்தரூபன், செயலாளர் க.மகிந்தன், உப செயலாளர் சோ.கலைவேந்தன், பொருளாளர் நா.பகீரதன் ஆகியோருடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (வ-7)


# மங்களகரமான திறப்பு விழா!

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தைத்திங்கள் 5 ஆம் நாள் (19.01.2000) புதன் கிழமை முற்பகல் 10.48 முதல் 12.00 மணி வரை (புதிய நேரம்) உள்ள சுப நேரத்தில் இல: 173, பலாலி வீதி, திருநெல்வேலி. என்னும் முகவரியில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

# எரிபொருள் நிரப்பு நிலையம்
# LANKA FILLING STATION

திருமிகு சி. வி. கே. சிவஞானம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
V. S. B. குறூப், ஜெசிபா ஏஜென்சி
- நிர்வாகப் பங்காளர்கள்.

தொலைபேசி: 2041

(00105)

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சை வினாக்கள்

எல்லா வினாக்களுக்கும் இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.

கீழ்வரும் பந்தியை கவனமாக வாசித்து அதன் கீழ்த் தரப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

''ஒரு வீட்டுத் தோட்டத்தில் நாங்கள் வாழ்கின்றோம். எங்களுக்குப் பக்கத்திலே கப்பல், மொந்தன், இதரை என்னும் இனத்தவர்கள் பலரும் வாழ்கின்றார்கள். வீட்டுக்காரர் நல்ல பசளையிட்டு நீர் பாய்ச்சி எங்களை வளர்க்கிறார். அதனால் நாங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளர்கிறோம். வீட்டுக்காரர் எங்கள் செழிப்பைக் கண்டு மகிழ்வார்''.

[1] இப் பந்தியில் விபரிக்கப்பட்டிருப்பது
(1) குரக்கன் (2) வாழை (3) மரவெள்ளி (4) நெல்

[2] இந்த வீட்டுத்தோட்டத்தில் வாழும் இனங்களில் அடங்காதது
(1) கப்பல் (2) இதரை (3) கதலி (4) மொந்தன்

[3] வீட்டுக்காரர் இவற்றை வளர்ப்பது
(1) குறைந்தளவு நீர் பாய்ச்சி
(2) நல்லபசளை இட்டு
(3) வானொலியில் பாட்டுப் போட்டு
(4) நன்கு கொத்தி உழுது

[4] ''நாங்கள்'' என்னும் சொல்லின் ஒருமைச் சொல்
(1) நாம் (2) அவன் (3) நான் (4) அவர்

[5] ''நாங்கள் வாழ்கிறோம்'' என்னும் வாக்கியத்தின் எழுவாய்
(1) நான் (2) நாங்கள்
(3) வாழைகள் (4) வாழ்கின்றோம்

[6] வினா [05] இல் உள்ள வாக்கியத்தின் பயநிலை
(1) நான் (2) நாங்கள்
(3) வாழைகள் (4) வாழ்கிறோம்

[7] 'வாழ்கின்றோம்' என்னும் சொல் எக்காலத்தில் அமைந்துள்ளது?
(1) நிகழ்காலம் (2) இறந்தகாலம்
(3) எதிர் காலம் (4) கூறமுடியாது

[8] ''நல்ல'' என்னும் சொல்லின் எதிர்ச் சொல்
(1) சிறந்த (2) தீய
(3) மேன்மையான (4) பொல்லாத

[9] இப்பந்தியில் நாங்கள் என்னும் சொல் எத்தனை தடவைவந்துள்ளது?
(1) 2 தடவை (2) 3 தடவை
(3) 1 தடவை (4) பல தடவை

[10] வீட்டுத்தோட்டத்தில் வளர்ப்பதற்கு பொருத்தமான தாவரம்
(1) மா (2) மரவெள்ளி (3) புளி (4) பனை

**கீளே உள்ள சொற்களின் ஒத்த கருத்துடைய சொற்களை எழுதுக.**

(11) அறிவுரை - ........................
(12) அச்சம் - ........................
(13) அரவம் - ........................
(14) அமைதி - ........................
(15) அகம் - ........................

**கீளே உள்ள சொற்களின் எதிர்க் கருத்துடைய சொற்களை எழுதுக.**

(16) ஆதி - ........................
(17) இறப்பு - ........................
(18) இரவு - ........................
(19) அழு - ........................
(20) அகலம் - ........................

**கீழே தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களின் கருத்தைத் தரும் ஆங்கிலச் சொற்களின் தொடர்பில் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.**

21] மாம்பழம்
(1) Mango (2) Mengo (3) Manko

22] புதன்கிழமை
(1) Wedneday (2) Wednesday (3) Wadnesday

23] மூக்கு
(1) nose (2) knose (3) noose

24] மயிர்
(1) kair (2) hair (3) heair

**மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

25] மழைகாலம் நீரைக் கொதிக்க வைத்துக் குடிப்பதே நல்லது. ஏனெனில்,
1) குளிர்காலம் எனவே சூடாகக் குடிக்க இதமாக இருக்கும்.
2) கொதித்து ஆறவைத்துக் குடிக்கும் நீர் சுவையானது.
3) பெரும்பாலான நோய் பரப்பும் அங்கிகள் இறந்து விடும் என்பதால்

26] ஆழமறியாமல் காலை விடாதே என்பதன் கருத்து
1) ஆழம் அளந்து பாராமல் கால் வைத்தல் ஆபத்து.
2) ஒரு விடயத்தைப்பற்றி நன்கு தெரியாமல் அதில் ஈடுபடக்கூடாது என்பது.
3) மழைகாலத்தில் வெள்ளத்தில் அவதானமாக நடக்கவேண்டும் என்பது.

27] தாவரங்களின் இயல்பாக அமையாதது
1) எல்லாத் தாவரங்களும் சுவாசிக்கும்.
2) எல்லாத் தாவரங்களும் வளர்ச்சியடையும்.
3) எல்லாத் தாவரங்களும் இடம்பெயரும்/அசையும்.

28] நன்மண்/தோட்ட மண்ணில்
1) மண்ணீரின் அளவு மிகக்குறைவு.
2) மண்ணீரின் அளவு மிகக்கூட.
3) மண்ணீர், மண்வளி, என்பன போதுமான அளவில் இருக்கும்.

**கல்விப்பகுதி**
**"வலம்புரி"**
**இல, 15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர்: ........................
சொந்த முகவரி: ........................
கற்கும் பாடசாலை: ........................
மாணவர் கையொப்பம்: ........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## (இராசி பலன்)

19 - 01 - 2000
புதன்கிழமை
(தமிழுக்கு தை 05)

திரயோதசி மாலை 4.14 வரை; மிருகசீரிடம் காலை 9.27 வரை; சித்தயோகம், இராகுகாலம் பகல் 1.05 முதல் 2.32 வரை; சுபநேரம் மாலை 5.36 7.06 வரை; பிரதோசவிரதம்.

**மேடம்:**
வாழ்க்கைவசதி, பணப் புழக்கம், பெரியோர் ஆசி.

**இடபம்:**
தவறானசிந்தனை, உடல் ரோகம், அலைச்சல்.

**மிதுனம்:**
வெற்றிக்களிப்பு, தொழில் சிறப்பு, அதிகாரம்.

**கடகம்:**
முரண்பாடு, ஏமாற்றம், கடினவாக்கு.

**சிங்கம்:**
காரியசித்தி, உறவினர் உதவி, பயணநன்மை.

**கன்னி:**
கடமைஉனர்வு, பெண் நட்பு, எதிர்பாராதசெலவு.

**துலாம்:**
துணிவின்மை, குடும்பப் பிரிவு, மனச்சுமை.

**விருச்சிகம்:**
மறைமுகதொல்லை, பணமுடை, அகங்காரம்.

**தனுசு:**
முயற்சிபலிதம், நண்பர் உதவி, தானதர்மம்.

**மகரம்:**
சுபகாரியம், வினோத முடிவு, கண்டிப்பு.

**கும்பம்:**
வைத்தியசெலவு, பழைய நினைவு, வேதனை.

**மீனம்:**
எதிரிகள் நட்பு, அதிகாரிகள்வெறுப்பு, அகாலஉணவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## முன்னேற்பாட்டு கூட்டம்

(ஊர்காவற்றுறை)

மிலேனிய ஆண்டினை வரவேற்கும் முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள் [க]

## வன்னி பெருநிலப்பரப்பு

# யுத்த இழப்புக்கள் குறித்து படை அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பிப்பு

(வவுனியா)

வன்னி பெருநிலப்பரப்பு யுத்த முனையில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் கனரக ஆயுத இழப்புக்கள் தொடர்பாக படை உயர் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் அறிக்கைகள் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிற்பகுதியில் வன்னியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணங்களை அறியும் பொருட்டு அரசாங்கம்; உயர் அதிகாரிகளை கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருந்தது.

இதற்கமைய இக்குழுவினரே வன்னியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகள்தொடர்பாக விசாரணை நடாத்தி 300 பக்கங்களை கொண்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இதேவேளை கனரக ஆயுத இழப்பு தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருவதால் இவ் அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. (க-14)

## வாழ்வு ஆதரவு நிதி

(தென்மராட்சி)

கனடாவிலுள்ள வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கக் கிளையினர் வல்வெட்டித் துறையிலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுள் முதல் கட்டமாக 37 பேருக்கு வாழ்வு, ஆதரவு நிதியை அண்மையில் அனுப்பிவைத்துள்ளனர்.

வல்வெட்டித்துறை நலன் புரிச் சங்க நிர்வாகிகள் இந்த நிதியை குறித்த குடும்பங்களுக்கு நேரில் வழங்கியுள்ளனர். (க-77)

## கால்கோள் விழா

யாழ். சன்மார்க்க மகா வித்தியால தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவும் செயற்பாட்டறைத் திறப்பு விழாவும் இன்று புதன் காலை 9மணிக்கு முதல்வர் து.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு வழங்குவதற்காக யுனிசெப் நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருட்களின் கையளிப்பு வைபவமும் இடம் பெறும். (க-14)

## இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் 1998ஆம், 1999ஆம் ஆண்டுக்கான ஆங்கிலநெறி இறுதிப்பரீட்சை செயல்முறை எதிர்வரும் 22ஆம் திகதிமுதல் 24ஆம் திகதி வரை கலாசாலை மண்டபத்தில் நடைபெறுமென கலாசாலை அதிபர் கே.சதாசிவமூர்த்தி தெரிவித்துள்ளார். (க-14)

## தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்கு

# இலவச பாடநூல்கள் அனுப்பப்படாமை குறித்து கல்வி அமைச்சரிடம் முறையீடு

(மட்டக்களப்பு)

வடகிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு. கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு இன்னமும் இலவச பாடநூல்கள் அனுப்பி வைக்கப்படாதது குறித்து இலங்கை தமிழர், ஆசிரியர் சங்கம் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரணவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

நாட்டிலுள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு வழங்கப்படாதது ஓரவஞ்சகமே. இதனால் மேற்படி மாணவர்களின் கல்வியில் தேக்க நிலை தோன்றியுள்ளது. இதனால் பூரண விசாரணை நடத்தி பாடநூல் விநியோகம் செய்யுமாறு மேற்படி சங்க செயலாளர் அமைச்சரைக் கேட்டுள்ளார். (க-60)

## ஆலய உற்சவம்

தலையாழி கொக்குவில் அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெறும்.

அலங்கார உற்சவ காலத்தில் காலை 8 மணிக்கு பூஜையும், பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேக ஆரம்பமும் மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று தொடர்ந்து வைரவப் பெருமான் வீதியுலா வருவார் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (7)

## தற்கொலை முயற்சியில் பெண்

யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற பெண் நோயாளி ஒருவர் சிகிச்சை முடிவுற்று வீடு சென்று கொண்டிருந்த வேளை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இச்சம்பவம் நேற்று முன் தினம் நண்பகல் யாழ் போதனா வைத்திய சாலைக்கு முன்னால் இடம் பெற்றது.

நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மரியதாஸ் யோசப் – மேரி யோசப்பின் (வயது 44) என்பவரே வீதியால் சென்று கொண்டிருந்த லொறியின் முன்னால் பாய்ந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இச்சம்பவத்தில் இவரது கை ஒன்று முறிவடைந்த நிலையில் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் ஓர் மனநோயாளி என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-29)

## கட்டட வேலைகள் பூர்த்தி

(பொலிகண்டி)

பொலிகண்டி கிழக்கில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இக்கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. (க)

## அறக்கொடை வழ்ங்கல்

[தென்மராட்சி]

தவத்திரு ஸ்ரீசச்சிதானந்தம் சுவாமிகளின் 40 வது விதேக முத்தி தின ஞாபகார்த்த அறக்கொடை வழங்கலும் பிரார்த்தனையும் இம் மாதம் 20ம் திகதி கைதடியிலுள்ள ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரமத்தின் தலைவர் திரு. இ. குழந்தைவடிவேலு தலைமையில்நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் திரு. எஸ். சக்திகிரீவன் சிறப்பு விருந்தினராகவும் பங்கு பற்றவுள்ளனர்.

(க-77)

# பிரார்த்தனை செய்யும் உதட்டைவிட சேவை செய்யும் கரம் சுத்தமானது

## வடமராட்சி- பிரதேச செயலர் உரை

(புலோலி)

''சமய வாழ்க்கை முறை மனித வாழ்க்கையின் இலட்சியத்தையடைந்து பேரின்பத்தையடைய வழி வகுக்கின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள பிறவிப் பிணியை நீக்க சைவசமய மக்கள் திருவாசகம் என்னும் தேனைப் பருக வேண்டும்''

இவ்வாறு வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற ''திருவாசக முற்றோதலை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இந்துக்களைப் 'பொறுத்தவரையிலே மார்கழிமாதம் மிகப் புனிதமான மாதமாகவுள்ளது. இந்த மாதத்தில் தான் பெண்கள் இறைவனை நினைந்து திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை பாடுகிறார்கள். பல்லவர் காலம் தொடக்கம் இவ்வழக்கம் இருந்து வருகின்றது. எமது மனம், வாக்கு, காயம் என்பன மிகத் தூய்மையாக இருக்க வேண்டும். பஜனைப் பாடல்கள்இத்தூய்மைத்தன்மையை ஏற்படுத்துகின்றது இறைவனின் நாமத்தை நாம் இமைப்பொழுது கூட மறக்கக் கூடாது. இதற்காகவே மாணிக்கவாசகர் நமச்சிவாய வாழ்க நாதன்தாழ் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க எனத் திருவாசகத்தினை ஆரம்பித்துள்ளார்.

மணிவாசகரின் திருவாசகத்தை தேனுக்கொப்பிடுகின்றார்கள் பெரியோர்கள். தேனின் தன்மை தானுங் கெடாது தன்னோடு சேர்ந்த மற்றவற்றையும் கெடப்பண்ணாது தேனை மருந்தாகவும் பாவிக்கின்றோம் அதேபோல் திருவாசகமும் எமது தொல்லையை நீக்கி அல்லலை அறுத்து ஆனந்தமாக்க வல்லது. திருவாசகம் என்னும் தேன் ஒரு தாய்க்கு எப்பொழுது பிள்ளைக்கு பாலூட்ட வேண்டும் என்பது தெரியும் அதேபோல் இறைவனுக்கும் எந்த நேரத்தில் எமக்கு எவ்வாறு அருள் வழங்க வேண்டும் என்பது தெரியும்.

இதனை விளக்கத்தான் மணிவாசகப் பெருமான் ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' எனக் கூறியுள்ளார்.

இறைவனை நாம் எந்த வடிவத்திலும் வழிபடலாம் இஸ்லாமியர்கள் உருவமேயில்லாமல் அல்லாவை வணங்குகிறார்கள். நாங்கள் செய்த பாவங்கள் ஏழேழு பிறப்பிலும் தொடர்ந்து வரும். நாம் ஆணவம், கன்மம், மாயை மற்றும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவற்றை நீக்க வேண்டுமானால் உள்ளத்தில் கள்ளமில்லா இறை வழிபாடு மிக மிக அவசியம் ஒளி வடிவமான ஞானரூபமான இறைவன் தனது பக்தர்களுக்கு வேண்டியதை வேண்டிய போது அருள்பவர்.

மக்கள் தொண்டை முக்கிய சமயத் தொண்டாகக் கருதி தொண்டாற்றி சமய வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர் மணிவாசகப்பெருமான். இதையே பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவும் கூறியுள்ளார். பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட சேவை செய்யும் கரங்கள் பரிசுத்தமானவை என்பதே அவரது கருத்தாகும் என்றார்.

(க-52)

## இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை புதிய மகப்பேற்று விடுதி திறப்புவிழா இன்று 19ஆம் திகதி முற்பகல் 10.30மணிக்குஇடம் பெறும்.

சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் செல்வி உ.சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக முன்னாள் சுகாதார சேவைகள் பிரதிமாகாணப்பணிப்பாளர் க.தா. சிவபாதம் மற்றும் வலி.மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந.திரிலோகநாதன் உட்பட பலர் கலந்துகொள்வர். (க)

## சுன்னாகப் பகுதியில் திருட்டு

(இளவாலை)

சுன்னாக சந்தைப் பகுதியில் உள்ள கடையில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இங்குள்ள பலசரக்குக்கடை ஒன்றின் ஓடுகளைப் பிரித்து திருடர்கள் புகுந்து பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

25 பண்டல் பீடிகள், பிஸ்கட்கள், பனடோல், சம்போ சொப்பிங்பை, புரோட்டினெக்ஸ் போன்றன திருடப்பட்டுள்ளன.

மேலும் இது தொடர்பாக சுன்னாகம் வர்த்தகச் சங்கம் கூடி காவலாளிகளை கடமையில் ஈடுபடுத்துவது என முடிவெடுத்துள்ளது. இம் முடிவுக்கு சுன்னாகம் பொலிஸாரும் இராணுவத்தினரும் அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## கட்டாக்காலி மாடுகள்

(திருநெல்வேலி)

பலாலி இராணுவ முகாமை அண்டிய பிரதேசத்தில் சுமார் 1000 மாடுகள் கவனிப்பார் அற்ற நிலையில் நடமாடித் திரிவதாக இராணுவ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இம் மாடுகளை இலகுவில் பிடிப்பதற்கான கருவி ஒன்றினை வழங்கும் பட்சத்தில் அனைத்து மாடுகளையும் பிடித்து ஒப்படைப்பதாவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## படையினரால் கைது செய்யப்பட்ட இருவரும் விடுவிக்கப்பட்டனர்

(புலோலி)

முள்ளிச்சந்தியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் இருவரும் விசாரணையின் பின்னர் கடந்த சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடியைச் சேர்ந்த இளையதம்பி மெய்யழகன் (வயது 48) புலோலி கிழக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பாலச்சந்திரன் ஆகிய இரு சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுமே இராணுவத்தினாரல் கொடிகாமத்திலிருந்து வரும் போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு வடமராட்சி ஈ.பி.டி.பி, அமைப்பாளர் திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் இராணுவத்தினரிடம் கோரியிருந்தார்.

(க-52)

## மக்கள் சேவைகள் தொடர்ந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ். மா. ந. உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கொழும்பில் வாழ்ந்தாலென்ன? லண்டனில் வாழ்ந்தாலென்ன? அவர்கள்பணியை நாம்திறம்படச் செயலாற்றி வருகின்றோம்.

இவ்வாறு யாழ். மாநகராட்சி மன்றத் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செ. விஜயரட்ணம் தெரிவித்தார்.

இந்த மாதம் 10 ஆம் திகதி தந்தை செல்வாபுரம், செல்வா சனசமூக நிலையத்தினதும், முன் பள்ளியினதும் அடிக்கல் நாட்டு வைபவத்தில் உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தந்தை செல்வாபுரத்தில் அமைந்துள்ள செல்வா சனசமூக நிலையமும், முன்பள்ளியும் ரூபா இரண்டு லட்சத்து 10,000 செலவில் புதிய கட்டடம் அமைப்பதற்காக இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி வடிகால் ரூபா மூன்று லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இக் கிராமத்தில் உள்ள மேஜர் சறோஜினி அவெனியூ திருத்த வேலைக்காக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் செலவிடப்படவுள்ளது.

தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் ஒரு விளையாட்டரங்கு அமைப்பதற்கான நடவடிக்கைளும் நடந்து கொண்டிருக்கின்றன.

வில்லூன்றி மயானம் புனரமைப்புசெய்வதற்காக ரூபா இரண்டு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சற்குளம் வடிகால் திருத்த வேலை செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மதிப்பீடு செய்து தருமாறு கோரி உள்ளேன். மதிப்பீடு எனது கைகளில் கிடைத்ததும் அதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன் எனவும் கூறினார்.

கொட்டடி மீன் சந்தை சுகாதாரச் சீர்கேடுகள் சீர் செய்வதற்கும், மலசலகூடம் புனரமைக்கவும், தண்ணீர் வசதி, தினசரி கிருமி நாசினி தெளிப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்க ஆணையாளருடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன் எனவும் தெரிவித்தார். (க-5)

## பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் பொன்விழாவும் நவீன தொழிநுட்ப கண்காட்சியும்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி பொன்விழா நிகழ்வுகளை மிகவும் பயன் மிக்க வகையில் கொண்டாட இருப்பதாக மேற்படி பல்கலைக்கழக பொறியியற் பீடத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக இம் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் வரும் பத்து நாட்களுக்கு மாபெரும் பொறியியற் கண்காட்சி ஒன்று இடம் பெறவுள்ளது.

தொழிநுட்பவியலை அறிமுகப்படுத்துவதைநோக்கமாகக்கொண்ட இக் கண்காட்சியில் இலத்திரனியல், மின்னியல், இரசாயண உற்பத்தி பொறியியல் சார்ந்த அம்சங்கள் அடங்கிய காட்சிப் பொருட்கள் இடம் பெறவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(க-9)

## மாத்தளை நகரில் நூறு பேர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர்

(மாத்தளை)

மாத்தளை நகரில் விசர் நாய்க் கடிக்கு இலக்காகி சுமார் 100 பேர் வரை பாதிக்கப்பட்டிருப்பதாக மாத்தளை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விசர்நாய் கடிக்கு இலக்கான 22 பேர் நேற்று முன் தினம் மாத்தளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள அவர்இந்தநாய்க்குஉண்மையிலேயேவிசர் எனக்கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் இந்த நாயினால் கடியுண்டவர்கள் அனைவரையும் உடனடியாக வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க-14)

## யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களை புதுப்பிக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட பிரிவுகளுக்குட்பட்ட இளைஞர் கழகங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் புனரமைக்குமாறு தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் திரு. சக்திவேல்தெரிவித்துள்ளார்.

இளைஞர் கழகங்கள் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகட்குள்ளும் 16 — 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களை உள்ளடக்கவேண்டும்.

இம் முறை 200 கழகங்கள் புனரமைக்கப் படவுள்ளதாகவும் 30 ஆம் திகதி பிரதேச சம்மேளன தெரிவு நடைபெறவுள்ளதாகவும் அடுத்து மாசி 10 ஆம் திகதி மாவட்ட சம்மேளன தெரிவு இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களாக;

பிரதேச ரீதியாக விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், தட்டச்சுப் பயிற்சிநெறி, மாவட்ட சம்மேளன பிரதேச சம்மேளன விளையாட்டுப் போட்டிகள் நடாத்துதல், இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைந்து சாரதி பயிற்சி வழங்குதல், போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

(க-59)

## அனலைதீவிற்கு மின்சாரம் அண்மையில் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து அனலைதீவிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வமைப்பின் அனலைதீவுப் பொறுப்பாளர் எஸ். பிரதீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆரம்ப நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணி பல்லவராஜன் பிரதம விருந்தினராகவும் மற்றும் நிஷாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்

- குறள்

# வலம்புரி

## தூக்கங்கடிந்து செயல்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற புனிதமான சொற்றொடரை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சேவைகள் என்று தொடரும் போது அவை பயனுள்ளதாகப் பரிணமிக்க வேண்டும் இந்த அடிப்படையில் வளரும்மொட்டுக்களான பாலர்மீதும்நகர்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம் தனது பார்வையைச் செலுத்தியது வரவேற்கத்தக்க தொன்றே.

சபா ஜெயராசா பல்கலை மாணவர்களைப் பயிற்றுவிப்பவர். அவரது தீர்க்க தரிசனக் கண்ணோட்டம் மெச்சத் தக்கதே. கலாநிதிகள் பாலரைப்பற்றிச் சிந்தித்தால் பெருமை போய் விடுமோ என்றிருக்காத பிரகிருதி அவர். பாலர் பாட்டுக்கள், வெளிவரும் பாலர்விளையாட்டுக்கள், பாலர் கதைகள், யதார்த்தமாக உளவியல் சிந்தனைகள் பொதிந்தனவாய் அமைவது அவரது சிறப்பு முத்திரை.

கல்வி கண்போன்றது. அதனைம் டயிரிடும் பருவமறிதல் பயனுடையது. ஐந்திலே சிந்தையில் ஏற்பவை உயர் நிலைக்கு உகந்தவை. உறுதுணை புரிபவை. நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித்திட்டம் பயனுள்ள ட'ல சேவைகள் புரிவது நாளையதேசமன்னர்க்கு கருவிலே திரு சேர்க்கும் செயலாயமைகிறது.

குறித்த திட்டத்தின் உந்துசக்தியாகஇளைஞன் யேசுரத்தினம் கடமை புரிவது ஈண்டு கருத்திற் கொள்ள வேண்டிய தொன்று. பணிவும் அடக்கமும் பணிக்கு இரு அணிகள். அவ்வணிகலனுடன் பல பணிகள் சிறப்புற்றமை கடந்த கால நிகழ்வுகள். இன்று வெளியாகும் சபாஜெயராசாவின் நூலின் பதிப்பாசிரியரும் அவரே.

பின்விளை நிகழ்வுகளின் ஆதார ஊற்று வைத்தியகலாநிதி தெய்வேந்திரன் ஆகும். அசைவில் அமைதி பணியில் திண்மை. எண்ணத்தில் உயர்வு. இவை அவரது அச்சொட்டான செயல் வடிவங்களின் முதலீடுகள் குறித்த ஒருங்கமைவினையாளர்கள் வைத்திய நாதரின் இதயநாதத்தை சுருதி பிறழாது ஒலிக்க வைப்பன.

அன்புடன் ஆசிரியர்

---

குர்திஷ் கிளர்ச்சித் தலைவர்

# ஒகலானுக்கான தண்டனையை ஒத்திப்போட துருக்கி தீர்மானம்

(துருக்கி)

மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட குர்திஷ் கிளர்ச்சிவாதத் தலைவர் அப்துல்லாஷ் ஒகலானுக்கான தண்டனையை ஐரோப்பிய உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை பிற்போட துருக்கி அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துருக்கிய பிரதமர் புல்லன்ட் எகேவிட் தெரிவித்துள்ளார்.

ஒகலானுக்கான தண்டனை குறித்து சக அமைச்சர்களுடன் 7 மணித்தியாலங்கள் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

முப்பது ஆயிரம் பேரின் மரணத்துக்கு காரணமான 15 வருட குர்திஷ் கிளர்ச்சிவாதத்தை முன்னின்று நடாத்திய ஒகலானுக்கு துருக்கியால் அறிவிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து ஒகலான் ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தார்.

இதேவேளை எந்த மரண தண்டனை நிறை வேற்றமும் ஐரோப்பிய யூனியனில்துருக்கிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று எகேவிட் தனது அமைச்சர்களுக்கு வலியுறுத்தியுள்ள அதேவேளை —

தற்போது ஐரோப்பியயூனியனின் வேட்பாளர் பட்டியலில் இருக்கும் துருக்கிமரண தண்டனையை நிறைவேற்றினால் அது ஐரோப்பிய யூனியனில் துருக்கி இணைவதை பாதிக்கும் என்று ஐரோப்பிய யூனியனின் தற்போதைய தலைமை பதவி கொண்ட போர்த்துக்கல் அறிவித்துள்ளது.

(க - 14)

## கராச்சி நகரில் குண்டு வெடிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் சனநெரிசல் மிகுந்த இடமொன்றில் குண்டுவெடித்ததில் 6 பேர் கொல்லப்பட்டதுடன் 17பேர் படுகாயங்களுக்கு இலக்காகி உள்ளனர்.

பழக்கடை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த மேற்படி குண்டு வெடித்ததில் அருகில் இருந்த பாரிய கட்டடங்கள் தரைமட்டமாகியதுடன் அவ்விடத்தில் நின்றபல வாகனங்களும் முற்றாக சேதமடைந்தன.

## பீகார் தேர்தலில் புதிய படையணிகள்

பீகாரில் விரைவில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களின் போது சட்டம் ஒழுங்கைபேணும் வகையில், மத்திய துணை இராணுவப் படைகளின் 400 பிரிவுகளை மத்திய அரசு அங்குஅனுப்பி வைக்கும் எனமத்திய உள்துறைச் செயலர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, 200 மத்திய துறை இராணுவப் படைகளைமட்டுமே பீகார் மாநில அரசுகோரி இருந்ததாகவும், மாகாணத்தின் வாக்குச் சாவடிகள் அனைத்தினதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டே மேலதிகமாகப் படைகளை அனுப்பி வைத்திருப்பதாகவும் மத்தியஅரசு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(க-09)

## இந்திய உயர் அதிகாரியை கைது செய்துள்ள பாகிஸ்தானியர்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவரை பாகிஸ்தான் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சட்ட விரோதமாக பிடித்துத் தடுத்து வைத்துள்ளதாக இந்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

மோசஸ் என்ற ஊழியரே இஸ்லாமபாத் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்தபோது கடத்தி செல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்கான தற்காலிக இந்திய தூதுவர்சுதீர் யாவ்இதுபற்றியகருத்துவெளியிடுகையில்;

மிகுந்த கட்டாயத்தின் பேரில், மோசஸ் பாகிஸ்தான் தொலைக்காட்சியில் தோன்றி பொய்யான தகவல்களை வழங்கியதையும், அவரது முகத்தில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான காயங்கள் இருப்பதையும் தாம் விளங்கிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

வியன்னாக் கோட்பாடு மற்றும் பரஸ்பர ராஜியத் துறை அதிகாரிகளை நடத்துவது தொடர்பான இருதரப்பு நெறிமுறைகளை பாகிஸ்தான் மதித்து நடக்கவில்லை எனவும் குற்றம் சாட்டி உள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகப் பணியாளர் ஒருவர் தனது மகனின் பாடசாலைக் கட்டணத்தை செலுத்தும் போது கள்ள ரூபாய் நோட்டைப் பயன்படுத்தியதாகக் கூறி டில்லிப் பொலிசார் வழக்கொன்றைப் பதிவு செய்துள்ளதன் எதிரொலியாகவே பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினரின் சட்ட விரோதக் கடத்தல் இடம் பெற்றிருப்பதாகவும் தெரிய வருகிறது.

(க-9)

## 6-வயது சிறுவனை மீண்டும் ஒப்படைக்கக் கோரிக்கை

[நியூயோர்க்]

கடந்த நவம்பர் 22ம் திகதி தாயாருடனும் ஏனைய 10 பேருடனும் வள்ளம் ஒன்றில் அமெரிக்காவிற்குச் செல்லும் போது வள்ளம் கடலில் மூழ்கி ஏனையோர் இறக்க தனியனாக தப்பிய தலாயம் கொன்றாலன்ஸ் என்ற 6 வயது சிறுவன் மட்டும் உயிர் தப்பியுள்ளார்.

இவ்விடயம் கியூபா நாட்டினருக்கு மியாமியில் உள்ள கியூபாவிரோதிகளுக்கும் சர்ச்சைக்குரிய ஒன்றாக விளங்குகின்றது. இந்தச் சிறுவனை கியூபாவிற்கு அனுப்பக் கோரி அமெரிக்கத் தூதரகம் முன் ஒரு இலட்சம் கியூபா தாய்மார்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை மியாமியில் உள்ள சிறுவனின் உறவினர்கள் அவன் கொம்யூனிச நாட்டில் வளரக் கூடாது என்று கூறினார்கள்.

சிறுவனின் தந்தையார் குறிப்பிட்ட சிறுவனை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில்

## மின்வழங்கும் திட்டத்தில் மாற்றம் முடிவற்ற வேலை நிறுத்தம் பலர் கைது

[புதுடில்லி]

இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அரசு சார்பு மின்சார சபையை மூன்று தனியான பிரிவுகளாக பிரிக்கப் போவதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து மின்சார சபைப் பொறியியலாளர், ஊழியர்கள் ஆகியோர் முடிவற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

மின்சார சபையை உத்தரப் பிரதேச மின் கழகம் - உத்தரப் பிரதேச மாநில உற்பத்திக் கழகம் - உத்தரப் பிரதேச நீர்மின் உற்பத்திக் கழகம் என மூன்று வகையாகப் பிரிக்கின்ற உத்தரப் பிரதேச மாநில அரசின் திட்டத்திற்கே இவ்வாறு எதிர்ப்புத் தோன்றி உள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் சுமார் 1800 பொறியியலாளர்களை கைது செய்துள்ள மாநில அரசு தாம் குறிப்பிட்ட தினத்திற்குள் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராத பட்சத்தில் பொறியியலாளர் உள்ளிட்ட 90,000 ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இவ்வேலை நிறுத்தத்தின் காரணமாக சுமார் 11 கோடி மக்களுக்கு மின்சாரம் வழங்கும் மின்வலுத்திட்டம் பாதிக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-09)

# விளையாட்டுச் செய்தி

யாழ். பிரதேச செயலர் பிரிவின்

## கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகளில் கிரிக்கெட் (மென்பந்து) போட்டி நாளை வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் யாழ். பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்த 11 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இப்போட்டியில் பங்கு கொள்ளும் கழகங்கள் வருமாறு; குருநகர் விளையாட்டு கழகம், ஈச்சமோட்டை வி. கழகம், யுத்காமல் வி. கழகம், சென். நீக்கிலஸ் வி. கழகம், கிறீன் பீல்ட் வி. கழகம், பாரதி வி. கழகம், பாடுமீன் வி. கழகம், கிறீன் கிங்ஸ் வி. கழகம், ஐக்கிய வி. கழகம், கொய்யாத் தோட்டம் சென். றோக்ஸ் வி. கழகம், ஜெட்லைன்ஸ் வி. கழகம்

இக்கழகங்கள் அனைத்தையும் காலை 8-30 மணிக்கு முன் சமுகம் தருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் சு. சிறிகாந்தன் கேட்டுக் கொள்கிறார்.

(க-29)

## விஸ்டன் டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் இங்கிலாந்து 8-ம் இடம்

(ஜோகன்னர்ஸ்பேக்)

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான தொடரில் தோல்வி அடைந்ததால் உலக டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் இங்கிலாந்து அணி எவ்வித முன்னேற்றமும் இல்லாது தொடர்ந்தும் எட்டாவது நிலையிலேயே இருந்து வருகிறது.

டெஸ்ட் விளையாடும் 9 நாடுகளில் ஸிம்பாவே அணியை விட முன்நிலையிலுள்ள இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணியிலிருந்து வெகு தூரம் தள்ளியே உள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் இங்கிலாந்து அணியே கடைசி நிலையில் இருந்தது ஆனால் இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரில் ஸிம்பாவே அணி தோல்வியுற்றதால் ஸிம்பாவே அணி கடைசி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் விஸ்டன் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல் நிலைகள் வருமாறு;

அவுஸ்திரேலியா 1-ம் இடம் 24 புள்ளிகள், தென் ஆபிரிக்கா 2-ம் இடம் 21 புள்ளிகள், இலங்கை 3-ம் இடம் 16 புள்ளிகள், பாகிஸ்தான் 4-ம் இடம் 15 புள்ளிகள், மே. தீவுகள் 5-ம் இடம் 14 புள்ளிகள், இந்தியா 6-ம் இடம் 13 புள்ளிகள்,

நியூசிலாந்து 6-ம் இடம் 13 புள்ளிகள், இங்கிலாந்து 8-ம் இடம் 8 புள்ளிகள், சிம்பாவே 9-ம் இடம் 6 புள்ளிகள்.

(க-29)

## உலக புகழ் பெற்ற கால் பந்தாட்ட வீரர் மத்தாயஸ் ஓய்வு பெறுவாரா?

(பேர்லின்)

உலகப் புகழ் பெற்ற கால் பந்தாட்ட வீரரான லோதர் மத்தாயஸ் தாம் இவ்வாண்டு இறுதியில் ஓய்வு பெறுவது குறித்து சிந்திப்பதாக தெரிவித்துள்ளார்.

ஜேர்மனிய நாட்டவரான மத்தாயஸ் 1990ல் ஜேர்மனி உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட போது அணிக்கு தலைமை தாங்கி வழி நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

39வயதுடைய மத்தாயஸ் தற்போது விளையாடிவரும் மார்ச் 21ஆம் திகதி பெய்ரன் முனிச் என்றஜேர்மனி யகால் பந்தாட்ட கழகத்திலிருந்து விலகுகிறார்.

மத்தாயஸ் அமெரிக்காவின் நியூஜோர்க் நியூஜோர்லிமெட்ரோ ஸ்டார்ஸ் கழகத்தில் மார்ச் மாதம்முதல்இணைந்து விளையாடவுள்ளார்.

(க-29)

# யாழ்நகரில் பாவனைக்குதவாத இறைச்சி கண்டுபிடிக்கப்பட்டது

அண்மைக்காலமாக சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறைகளில்களவாடப்பட்ட, நோய் வாய்ப்பட்ட, காயமடைந்த, மனித பாவனைக்கு ஒவ்வாத கால்நடைகளின் இறைச்சி விற்பனை எம்மால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது,

இவ்வாறு யாழ்,மாநகர சுகாதார வைத்திய அதிகாரி இ.தெய்வேந்திரம் வெளியிட்டசெய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எமது பகுதியினால் இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்குத்தகுந்த விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளிக்கிழமை, பௌர்ணமி தினம், மாட்டுப் பொங்கல் தினங்களில் கால்நடைகளை கள்ளமாக வெட்டுவதைத் தவிர்க்குமாறு வேண்டியிருந்தோம். ஆயினும் மாட்டுப் பொங்கல் தினத்தன்று கால்நடைகள் வெட்டப்பட்டுள்ளன''.

கால்நடைகளின் களவுகள் அதிகரித்துள்ளது. இதைத் தவிர்க்கும் முகமாக கொல்களத்திற்கு வெட்டுவதற்காக வரும் கால்நடைகளை விற்றவர், வாங்கியவர் சம்ந்தமாக கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிக் கடிதம் இருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் மாநகர சபை உத்தியோகத்தர்களின் முத்திரை பதிக்கப்பட்ட இறைச்சியை வாங்கி நோய் வராமல் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு மீண்டும் வலியுறுத்துகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டி...

உள்ள சிறைச்சாலைக்கும், காலியில் உள்ள பூஸா சிறைச்சாலைக்கு 250 பேர்களும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

களுத்துறை கைதிகளில், கண்டியில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குப்பதிவானோர் கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கும், அனுராதபுரத்தில் வழக்கு பதிவானோர் அனுராதபுரத்திற்கும், பதுளையில் வழக்கு தாக்கல் செய்திருப்போர் பதுளைச் சிறைச்சாலைக்கும் மாற்றப்படவிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இக் கைதிகளின் இடமாற்றங்கள் அடுத்த மாதம்முதல் வாரத்தில் இடம் பெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பிரதேசங்களைச் சேர்ந்த கைதிகளை பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்பிற்கும் மாற்றமுடியாது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பூஸாவுக்கு கைதிகள் மாற்றப்படுவதால் கைதிகளை உறவினர்கள் பார்வையிட முடியாதிருக்கும் என மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (வ)

## பிரிட்டிஷ்...

வந்திருந்தார் இவருடன் தூதரக அதிகாரிகளும் வந்திருந்தனர்.

வவுனியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளுக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் வவுனியா அரச அதிபர் ஆகியோரைச் சந்தித்து வவுனியா நிலை குறித்து அறிந்து கொண்டனர்.

இவர்கள் வேப்பங்குளம் பூந்தோட்டம் நலன்புரிநிலையங்களுக்கும் சென்று அவதானித்தனர். இவர்கள்விடுக்கவிருக்கும் அறிக்கையையும் குயின்லிண்ட்ஜே சேர்க்துவிரிவான அறிக்கை ஒன்றையும் செயலாளருக்கு அனுப்பவுள்ளார்.


# கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரிய கலாசாலை இரண்டாம் வருட வர்த்தகப்பிரிவு மாணவன்

**திரு. நா. பிரபாகரன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி நாகராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரது ஆத்ம சாந்தி அடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

(00109)



# கண்ணீர் அஞ்சலி

கடந்த 14 - 01 - 2000 அன்று அகாலமரணமடைந்த பருத்தித்துறை நகரசபைத் தலைவர்

**வடிவேலு விஜயரட்ணம்ஜே.பி.யூ.எம்**

அவர்களுக்கும்

அவருடன் மரணமடைந்த சபையின் ஊழியரான

**முதலி பகீரதன்**

அவர்களுக்கும்

எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர்ப் பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
திருநெல்வேலி.

(00113)


## பாலர் பாடசாலை திறப்புவிழா

வில்லூன்றி தேவஸ்தானத்தால் அமைக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலை எதிர்வரும் (20.1-2000) வியாழக்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திரு,ப. செந்தில்நந்தனன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் நலன் விரும்பிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [4]

## குமார்...

அத்துடன் குமாரின் கொலை தொடர்பாக 200ற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத் தக்கதாகும் [க- 05[

## இன்று..,

பத்திரிகையாளர்கள் இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இப்பத்திரிகையாளர் குழு யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலவரம் பற்றி அறியகுடாநாட்டைச்சுற்றிப் பார்க்கவுள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## தற்கொலைக்..

கொலைக் குண்டுதாரி என சந்தேகிக்கப் பட்ட யசோதா திலகரத்தினா இன்னமும் கொழும்பில் இருக்கிறார் என்றும் இவரைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் தற்கொலைக்குண்டுதாரியின் தாய் தந்தை இருவரையும் விடுதலை செய்ய விருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார், ]வ]

## ஈ.பி.டி.பி...

நாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்,

ஈ. பி, டி. பி அமைப்பைச் சேர்ந்த எம். சந்திரகுமார், எஸ். தங்கவேலு ஆகிய இருவரினது வெற்றிடங்களுக்கே மேற்படி இருவரும் பாராளு மன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். (வ)

## பிரதமரின்...

பொறுப்பதிகாரி வத்துலவிசயரத்தின ஆகியோர் அடங்கிய குழுவினர் இக்குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதமரின்பாதுகாப்பு அதிகாரியைக் குறிவைத்தே இக்குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.


சிறீ செல்வா திரையில்
விஜயகுமார்,
விஜயசாந்தி
**இலட்சியம்**
(சண்டைக் காட்சிகள் நிறைந்தது)
காட்சிகள் [10.30,2.30]
(ப.நே)
யாழ்ப்பாணம்.


# தமிழ் மக்களின் நலன்களுக்கு ஆரம்பமான கட்சி இன்று சீரழிகிறது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினுள் தற்போது ஏற்பட்டுள்ள பிளவையிட்டு கட்சியின் மலையகத் தோழர்களாகிய நாங்கள் வேதனையும், விரக்தியும் அடைகின்றோம். வடகிழக்கு மலையக மக்களின் நலன்களுக்காக ஆரம்பிக்கப் பட்ட கட்சி இன்று பல முரண்பாடுகளுக்குள் சிக்கி சீரழிகின்றது.

ஈபி.ஆர்.எல்.எவ். பிளவுபட்டது தொடர்பாக ஈபி, ஆர்,எல்,எவ் தோழர்கள் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த நிலைக்கு தற்போது உள்ள செயலாளர் நாயகம் தோழர் சுரேஸ் பிறேமச்சந்திரன் அவர்களே பொறுப்பேற்க வேண்டும். இந்த கட்சியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த மலையகத் தோழர்கள் மட்டுமல்ல, பல புத்திஜீவிகள் அர்ப்பணஉணர்வுடன் நீண்டகாலம் உழைத்த பல தோழர்கள் கட்சியில் இருந்து வெளியேறியமைக்கும் இவரின் அர்ப்பண உணர்வற்ற தன்னலத்தன்மையே காரணம்.

மறைந்த தோழர் க. பத்மநாபா அவர்களின் தலைமையில் தொலை நோக்குடன் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி போராட ஆரம்பிக்கப்பட்ட கட்சியானது, இன்று தேய்ந்து தேக்கமடைந்து பிளவை நோக்கி செல்லப்பட்டதானது மக்களுக்கு பெரும் விசனத்தை தோற்றுவித்துள்ளது. இந்தக் கட்சியின் பாரம்பரியங்கள் அர்ப்பணிப்புக்களை கருத்திற் கொண்டு இதில் அக்கறை கொண்டுள்ள தோழர்களும் கட்சியை சரியான திசைவழியில் முன்னெடுத்து செல்லவுள்ள தோழர்களும் முன்வர வேண்டும் என மலையகத் தோழர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வறிக்கையில் தோழர்கள் நோயல், சர்மா, சந்திரபாலா, வினோ, செல்வம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். (வ)

# நேற்று அதிகாலை புலோலி சுற்றிவளைப்பு

புலோலி வடக்குக் கிழக்கு கிராம சேவகர்பிரிவைச் சேர்ந்த வராத்துப்பளை, சந்தாதோட்டம், உத்திராவத்தை திகிரி, கூழாவடி, அறுபதுபாகைக் கிண்த்தடி ஆகிய கிராமங்கள் நேற்று அதிகாலை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடுகள் பலத்த சோதனைக்குள்ளாகின.

அங்குள்ள மக்கள் அல்லப்பை இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். [52]

## சைக்கிள் திருட்டு

நல்லூர் கந்தசாமி ஆலய பகுதியில் கடந்த திங்கட்கிழமை லுமால பென்கர் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகயாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே வேளை கடந்த காலங்களிலும் இங்கு இவ்வாறு பல சைக்கிள்கள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அலவி...

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களும் கலந்து சுலோகங்களைத் தாங்கியும் கோசங்களை எழுப்பியவாறும் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர், யாழ். மாவட்டத்தில் தற்போது கடமையில் உள்ள மூன்று உயர்அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டுமென்று சுலோகங்களைத் தாங்கியவண்ணம் சென்றதை காணக்கூடியதாக இருந்ததாக எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார். (வ)

## வன்னிக்கு சென்றனர்

நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து எட்டு பஸ்வண்டிகளில் பிரமணாளங்குளத்தில் இருந்து வன்னி செல்வதற்காக 297 பேர் பயணமானார்கள் இவர்களில் 231 பயணிகள், 58 பேர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இருந்து வந்தவர்கள் 13 பல்கலைக்கழக மாணவரும் சென்றனர் என வவுனியா செயலகம் அறிவித்துள்ளது,

ஒருபயணி இரு பொதிகள் மட்டுமே தம்முடன் எடுத்து செல்ல அனுமதிக்கப் பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்


நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயானியின்
**சூரிய வம்சம்**
(ரீல் ஸ்)
காட்சி 11.00, 2.30
(பு. நே.)
(00106)



# வாழ்த்துகின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.) யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளராக சேவையாற்றி (18 - 01 - .000) அன்று யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ள

கௌரவ

**வேலும்மயிலும் குகேந்திரன்**
(வி. கே. ஜெகன்)

அவர்களுக்கும், மற்றும் இதேதினம் பாராளு மன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ள.

**சின்னையா தவராசா (பா. உ)**

அவர்களுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நல்லூர் பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள்
திருநெல்வேலி.

(000112)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.